# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## ...ண்டாம் வருட முதலாம் அரையாண்டிற்கான சிறப்புக் கல்விமாணித் தேர்வு
## (2014/2015) January-February, 2018

## EDS 2133 - கல்வியில் தத்துவ அடிப்படைகள்
## (Philosophical Foundations of Education)

...ம் - 03 மணித்தியாலங்கள்

...தி I இல் இருந்து இரண்டு (02) வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று (03) ...னாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக

---

## பகுதி I

அ. "தத்துவமென்பது ஏதாவது ஒன்றினை ஆழமாக நோக்குதல்" என்பதாகும். அந்தவகையில் தத்துவமென்றால் என்னவென்பதனை உமது பார்வையில் சுருக்கமாக விளக்குக? (03 புள்ளிகள்)

ஆ. தத்துவத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டிய பரப்புக்கள் தொடர்பாகச் சுருக்கமாக ஆராய்க. (04 புள்ளிகள்)

இ. "கல்வித் துறையில் காலம் காலமாக ஏற்பட்டுவந்த மாற்றங்களுக்கு தத்துவங்களின் செல்வாக்கு மிகவும் உறுதுணையாக இருந்து வந்துள்ளன." இக்கூற்றினை பொருத்தமான சான்றுகளுடன்ஆதாரங்காட்டி கல்வியில் தத்துவங்களின் பாதிப்புக்களை சுருக்கமாக ஆராய்க? (07 புள்ளிகள்)

அ. பிளாட்டோ (Plato) கல்வி தொடர்பாகக் கூறிய கருத்துக்களில் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவற்றினை வரிசைப்படுத்துக? (03 புள்ளிகள்)

ஆ. இயற்கைவாதியான ரூசோவின் கலைத்திட்டத்தின் பிரதான அம்சங்களை வயதடிப்படையில் வரிசைப்படுத்தி, சுருக்கமாக விளக்குக? (04 புள்ளிகள்)

இ. இலங்கை தேசியகல்வி ஆணைக் குழுவின் முதலாம் அறிக்கையில் (1992) கூறப்பட்டுள்ள அடிப்படைத் தேர்ச்சிகளில் தொடர்பாடல் தொடர்பான தேர்ச்சிகள் இன்றைய வகுப்பறை மட்டங்களில் அடையப்படுகின்றனவா? என்பதனைச் சுருக்கமாக விளக்குக. (07 புள்ளிகள்)

அ. சமூகத்தில் கல்விசார் மாற்றம் ஏற்படுவதற்கு கல்வியின் எத்தகைய இலக்குகள் இன்று வரையறுக்கப்பட்டுள்ளன என்பதனைப் பட்டியற்படுத்துக? (03 புள்ளிகள்)

ஆ. "நாங்கள் வாழ்கின்ற கலாசாரச் சூழல் எமது நடத்தைகளைப் பெரும்பாலும் உருவாக்குகின்றது."இதனடிப்படையில் பல்கலாசாரக் கல்வியின் குறிக்கோள்களை எவ்வகையில் வடிவமைக்க வேண்டும் எனபதற்கு நான்கு (04) உதாரணங்கள் காட்டி சுருக்கமாக விளக்குக?

(04 புள்ளிகள்)

இ. சமூக எதிர்பார்ப்புக்கள் பாடசாலைகள் நிறைவேற்றப்பட வேண்டும் "கல்வியால் சமூகத்திற்கு நன்மைகள் கிடைக்கும் அதே வேளையில் போன்றே பாதகமான செயற்பாடுகளும் காணப்படுகின்றன." எனவே இவற்றினை பொருத்தமான உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக?

(07 புள்ளிகள்)

## பகுதி II

04. அ. "இன்றைய கல்விக்கொள்கைகளில் ஆரம்ப நிலைக்கல்வியை வலுப்படுத்த முன்பள்ளிக் கல்வியை அரசாங்கம் ஒரு திடமான ஆயுதமாகப் பயன்படுத்தவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது."இதற்காக நீங்கள் எவ்வகையான உத்திகளைப் பயன்படுத்தலாம் என்பதனை சிபாரிசு செய்க?

(10 புள்ளிகள்)

ஆ. "இன்றைய நிலையில் பாடசாலைக் கல்விமட்டும் போதுமானது என்பதனை ஏற்றுக் கொள்ளமுடியாது."அந்தவகையில் 'முறைசாராக்கல்வியும்' (Non-formal) இன்று வலுப்பெற்றுள்ளது. இம்முறைசாராக் (Non-formal) கல்வியின் செல்வாக்குகள் முறைசார் கல்வியில் ஏற்படுத்தும் தாக்கத்தினை விமர்சனரீதியாக ஆராய்க.?

(14 புள்ளிகள்)

05. அ. "பாடசாலைகள் இன்று பாடம்சார் செயற்பாடுகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்குகின்றன."ஆனால் கல்வியமைச்சு விழுமியங்களின் செல்வாக்குகளை அதிகம் கற்கும் சமூகத்தோடு இணைத்துக் கொள்ள வேண்டும் என எதிர்பார்ப்பதற்கான காரணங்கள் யாவை என நீர் கருதுகின்றீர்?

(10 புள்ளிகள்)

ஆ. கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சிறப்பான முறையில் இயங்குவதற்கு ஆசிரியர்கள் தங்களது ஒழுக்கக்கோவைகளை உரிய முறையில் உணர வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு, ஆசிரியர் - மாணவர் தொடர்பு, ஆசிரியர் - பெற்றோர் தொடர்பு என்பனவற்றினை எவ்வாறு வினைத்திறன் கொண்டதாக அமைக்கலாம் என்பதனை புதிய கொள்கை உருவாக்கத்தோடு தொடர்படுத்திப் பரிசீலனை செய்க.?

(14 புள்ளிகள்)

06. அ. சமூகமயமாக்கல் முகவர்கள் என்பவர்கள் யாவர் என்பவற்றினை விளக்கி அவற்றில் சமவயதுக்குழுக்களினால் மாணவனொருவன் எவ்வகையில் நேரான மற்றும் எதிரான செயற்பாடுகளுக்கு உந்தப்படுகின்றான் என்பதனை விமர்சன ரீதியாக ஆராய்க?

(10 புள்ளிகள்)

ஆ. "இன்றைய நிலையில் சமூகமயமாக்கலின் மையநிலையமாக எதிர்பார்க்கப்படுவது பாடசாலையாகும்."எனவே சமூகமயமாக்கலுக்கான பங்களிப்பினை ஒவ்வொரு பாடசாலையும் எவ்வகையில் வழங்குகின்றதென்பதனை நீர் மேற்கொண்ட கள ஆய்வினை (Field work) மையமாகக் கொண்டு பரிசீலனைசெய்க? (14 புள்ளிகள்)

பின்வருவனவற்றினை சுருக்கமாக விளக்கு

அ. தொடரும் கல்வியின் நோக்கங்கள் (Life Long Education)

ஆ. கல்வியும் சர்வதேசப்புரிந்துணர்வும் (Education and International Understanding)

இ. மிஷேல் பூக்கோவின் (Michel Foucault) "அறிவுக்குவியம்" தொடர்பான தத்துவம்

ஈ. பயன்பாட்டு வாதத்தின் தற்கால நடைமுறைகள் (4 x 6 = 24 புள்ளிகள்)

மொத்தப்புள்ளிகள் - 100 (பகுதி I - 28, பகுதி II – 72)